எம்.சி.ஓ.பி எண்: 5336/2022 தேதி: 15.07.2026

மசா. : 2

பெயர் : சாமிநாதன்

த/பெ. : அப்பாவு

வயது : 56

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ12 மட்டும் தாக்கல் செய்கிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்கவரவில்லை. மனுதாரர் தரப்பில் கேட்டுகொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்து நடந்த இடம் ஸ்ரீபெரும்புத்தூர் குன்றத்தூர் சாலை. அந்த சாலை நெடுஞ்சாலை. விபத்து நடந்த இடத்தில் மேம்பாலம் இல்லை. விபத்தை பார்த்ததற்கும் சம்பவ இடத்தில் இருந்தேன் என்பதற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. விபத்து குறித்த குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை.பார்க்காத விபத்தை பார்த்ததாக மனுதாரருக்கு உதவும் நோக்கில் இழப்பீடு பெறவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

x

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.